# மேட்டுப்பாளையம் நகராட்சி

மேட்டுப்பாளையம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் 30. 06.2023 ஆம் தேதி வெள்ளி கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது. இக்கூட்டத்திற்கு நகர்மன்றத்துணைத்தலைவர், நகர் மன்ற உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

நகர்மன்றத் தலைவர்
மேட்டுப்பாளையம் நகராட்சி

## கூட்டப்பொருள்

| | |
|---|---|
| 1 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 16 பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் உள்ள மாணவியர்களின் கழிப்பிடம் மற்றும் ஆசிரியர்கள் கழிப்பிடம் மிகவும் மோசமாக உள்ளது எனவே, கழிப்பிடத்தில் மராமத்து பணிகள் (Water supply, Electrification, Toilet Door etc., ) போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம்ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 4956/2023/இ1<br>தீர்மானம் எண் : 608<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 2 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் உள்ள ஆழ்துளை, கிணறுகளில் உள்ள நீர் முழ்கி மோட்டர்கள் பழுது அகற்றவும், பழுதான சின்டெக்ஸ் டேங்குகளை மாற்றிவிட்டு புதிதாக மாற்றவும், பழுதான பைப்லைன்களை மாற்றவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 582/2023/இ1<br><br>தீர்மானம் எண் : 609<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 4 மதினா நகர் பகுதியில் உள்ள நேருஜி நகராட்சி துவக்கப்பள்ளியில் புதிய அங்கன்வாடி கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகிறது மேலும் அக்கட்டிடத்தில் கூடுதல் வசதிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/- லட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 581/2023/இ1<br>தீர்மானம் எண் : 610<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் நீரேற்றம் செய்யப்படும் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. மூன்று குடிநீர் திட்டங்களில் அவ்வவ்போது ஏற்படும் பம்பிங் மெயின் பகிர்மானக் குழாய்களில் உடைப்புகள் சரிசெய்யவும், பொதுக்குழாய், பொதுக்கழிப்பிடங்களுக்குத் தேவையான உதிரிச் சாமான்கள் விநியோகம் செய்யவும் தற்போது சாலை வசதி, மற்றும் உடைப்புகள் ஏற்படுவதை சரி செய்யவும் உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சம் குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 582/2023/இ1<br>தீர்மானம் எண் : 611<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 5 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு – தலைமை நீரேற்று நிலையத்திற்கு பிரிவு – தலைமை நீரேற்று நிலையத்திற்கு தேவையான படிகாரம் (Sulphate of Alumina) வாங்குதல் தொடர்பாக<br>மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று குடிநீர்திட்டங்களில் ஆற்று நீரை (Rawwater) எடுத்து வடிதளங்களின் மூலம் சுத்தம் செய்து சுத்த நீராக (Clear water) மாற்றி மேல் நிலைத் தொட்டிகளுக்கு மாற்றி நிரப்பப்பட்டு பொது மக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. தற்போது பெய்து வரும் மழையால் ஆற்றில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு செம்மண் கலந்து வருவதாலும், கடின தன்மை அதிகமாக (Turbidity) இருப்பதாலும் ஆற்று நீரின் அழுக்கை நீக்க படிகாரம் பயன்படுத்தப்பட்டு வருகிறது தற்போது படிகாரம் கையிருப்பு குறைவாக இருப்பதால் இனிவரும் மழைக்காலங்களில் படிகாரம் கூடுதலாக தேவைப்படுகிறது எனவே படிகாரம் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.360000/-ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 582/2023/இ1<br>தீர்மானம் எண் : 612<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 6 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 18 காட்டூர் நகராட்சி துவக்கப்பள்ளியில் முதல் தளத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்ள (Electrification, Water tank, Painting etc.,) போன்ற பணிகள் மேற்கொள்ள ஆகும். தோராய செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 581/2023/இ1<br>தீர்மானம் எண் : 613<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 7 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 2 வெள்ளிப்பாளையம் சாலையில் நடைபெற்று வரும் சமுதாயக் கழிப்பிடத்தை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்கள் 21.04.2023 அன்று ஆய்வு செய்த போது மதிப்பீட்டில் இல்லாத சில பணிகளை அதாவது சுற்றுசுவர், Partition Wall, Compound போன்ற சில பணிகளை மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார் அப்பணிகளை மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.80 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 580/2023/இ1<br>தீர்மானம் எண் : 614<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 8 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் வார்டு எண் 12 MSR Puram பகுதியில் அமைந்துள்ள புதிய நகர்ப்புற சுகாதார மையத்தில் சுற்றிலும் பாதுகாப்புக்காக Grill அமைக்கவும் மற்றும் Gate அமைக்கவும் இதர பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செவினம் ரூ.3.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்<br>ந.க.எண் 580/2023/இ1<br>தீர்மானம் எண் : 615<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 9 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 14 நடூர் கிளப் ரோடு சாலையை Paver Block சாலையாக அமைக்க கலைஞர் நகர்புற மேம்பாட்டுத்திட்டம் 2021-22ன் கீழ் இச்சாலையில் மழைநீர் வடிகால் கட்டி Paver Block சாலை அமைக்கப்பட்டுள்ளது. இச்சாலையின் கிழக்கு மற்றும் மேற்கு புறங்களில் மழைநீர் வடிகாலில் செல்லக்கூடிய நீர் சாலையை கடந்து செல்ல சிறுபாலங்கள் ஏதும் இல்லை. மழை நீர் கடந்து செல்ல சிறுபாலங்கள் ஏதும் இல்லை. மழை நீர் கடந்து செல்ல Pipe Culvert அமைக்க வேண்டியுள்ளது. இதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.<br><br>ந.க.எண் 580/2023/இ1<br>தீர்மானம் எண் : 616<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 10 | மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையம் வளாகத்தில் பணியாளர் குடியிருக்கும்கட்டிடம், பங்களா மேடு நீர் உந்து நிலைய வளாகத்தில் பணியாளர் குடியிருக்கும் கட்டிடம் மற்றும் பேருந்து நிலையம் பொதுக்கழிப்பிடம் ஆகிய கட்டிடங்களுக்கு புதிய மின் இணைப்பு பெறப்பட வேண்டும் மேற்படி மின் இணைப்பு பெறுவதற்கு மின்மானிபெட்டி பொருத்த தேவையான மின்வயரிங் மதிப்பீட்டு கட்டணம் ஆகியவற்றிற்கு உத்தேச செலவு ரூ.1,20,000/- ஆகும் எனவே மேற்படி பணியினை குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 4956/2023/இ1<br><br>தீர்மானம் எண் : 617<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 11 | மேட்டுப்பாளையம் நகராட்சி பொறியியல் பிரிவு, தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று குடிநீர்த்திட்டங்களுக்கு தேவையான குளோரின் வாயு – சிலிண்டர்கள் நிரப்புதல் – தொடர்பாக<br>மேட்டுப்பாளையம் நகராட்சி தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள மூன்று குடிநீர் திட்டங்களிலும் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிக்க குளோரின்வாயு (Liquid chlorine) பயன் படுத்தப்பட்டு வருகிறது. தற்போது கையிருப்பில் 1 சிலிண்டர் குறைவாக இருப்பதாலும் இனிவரும் காலங்களில் (மழைகாலமாக) கூடுதலாக குளோரின் வாயு தேவைப்படுவதாலும் குளோரின் வாயு சிலிண்டர் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ.5,00,000/- லட்சம் ஆகும். இச்செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 582/2023/இ1<br><br>தீர்மானம் எண் : 618<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 12 | தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையர் அவர்கள் கடந்த 22.04.2023 முதல்24.04.2023 வரை கோவை மாவட்டத்தில் ஆய்வுப்பணி மேற்கொண்டதற்கு தனியார் நிறுவனம் மூலம் வாடகைக் கார் பயன்படுத்தியதற்கான தொகை ரூ.16560/- (ரூபாய் பதினாறாயிரத்து ஐநூற்றி அறுபது மட்டும்) மேட்டுப்பாளையம் நகராட்சி பொது நிதியிலிருந்து "Noiel Travels" நிறுவனத்திற்கு வழங்க கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 1801/2023/கொ1 நாள் 26.04.2023 ல் உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட தொகையினை அந்நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு:<br>1.அனுமதி வழங்கலாம்<br>2.அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்<br>ந.க.எண் 1441/2021/சி3<br><br>தீர்மானம் எண் : 619<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 13 | இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை அவர்களுக்கு 2022-2023 ஆண்டிற்கு வருடாந்திர பங்கு தொகை ரூ.1,25,000/-ஐ செலுத்துமாறு இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோவை அவர்களின் கடிதம் ந.க.எண்.471/2022/அ2 நாள் 06.03.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க மேற்படி தொகை ரூ.1,25,000/- செலுத்துவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 2755/2017/அ3<br><br>தீர்மானம் எண் : 620<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 14 | மேட்டுப்பாளையம் நகராட்சியின் 2022-2023ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் பார்வையிட்டு பதிவுசெய்யலாம்<br>ந.க.எண் 2003/2023/அ3<br><br>தீர்மானம் எண் : 621<br>தீர்மானம் : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது. |

| 15 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி, கல்விநிதி, மற்றும் குடிநீர்நிதி 2023-2024ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 16.05.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது. |
|---|---|

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு % |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 28 வசந்தம் நகரில் அமைக்கப்பட்டுள்ள பசுமை பூங்காவில் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.5.00 இலட்சம் | திருவாளர்.ஷார்ப் சிஸ்டெம்ஸ் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S சேதுபதி | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | வார்டு எண் 2 வெள்ளிப்பாளையம் சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள சமுதாய கழிப்பிடத்தில் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.10.00 இலட்சம் | திருவாளர் V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S சேதுபதி | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | மேட்டுப்பாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள நீர் மூழ்கி மோட்டார்கள் பழுது அகற்றுதல் | ரூ.3.00 இலட்சம் | திருவாளர்.ஆலயம் போர்வெல் எலக்டரிக்கல்ஸ் | 0.05%மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.எம்.வேலுசாமி | 4.99% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 4 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் புதியதாக வால்வுபிட் அமைத்தல் | ரூ.10.00 இலட்சம் | திருவாளர்.M3 இன்ஜினியரிஸ்& கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 0.01 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S சேதுபதி | 4.97% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| | வார்டு எண் 18 காட்டூர் நகரவை பள்ளியில் முதல் தளத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள கட்டிடத்தில் கூடுதல் வசதிகள் செய்தல் | ரூ.9.90 இலட்சம் | திருமதி.சுந்தரி | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.G.K.S சேதுபதி | 4.95% மதிப்பீட்டிற்கு அதிகம் |

மேற்காணும் பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

ந.க.எண் 580/2023/இ1

தீர்மானம் எண் : 622

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

16 மேட்டுப்பாளையம் நகராட்சியில் பொதுநிதி மற்றும் குடிநீர் நிதி 2023-24 ன் கீழ் கீழ்க்கண்ட பணிகளுக்கு 25.04.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்புநோக்குப்பட்டியல் தயார் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தாரர் பெயர் | மதிப்பீடு விழுக்காடு |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 12 எம்.எஸ்.ஆர் புரம் பகுதியில் கட்டப்பட்ட நகர்ப்புற சுகாதார மையத்தில் Grill Gate மற்றும் இதர பணிகள் செய்தல் | ரூ.3.00 இலட்சம் | திரு.வி.செல்வராஜ் | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.என்.ஜெகநாதன் | 4.96% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 2 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் இடங்களில் RCC Pipe Culvert அமைத்தல் | ரூ.1.00 இலட்சம் | திரு.வி.செல்வராஜ் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திரு.என்.ஜெகநாதன் | 4.98% மதிப்பீட்டிற்கு அதிகம் |
| 3 | தலைமை நீரேற்று நிலையம் பங்களா மேடு நீருந்து நிலையம் ஜவஹர்லால் நேரு பேருந்து நிலைய கழிப்பிடங்கள் ஆகிய இடங்களில் மின் இணைப்பு பெற்று மின்சார வசதி செய்தல் | ரூ.1.20 இலட்சம் | திரு.G.K.S சேதுபதி | 0.01% மதிப்பீட்டிற்கு குறைவு |
| | | | திருவாளர் V.R.K கன்ஸ்ட்ரக்சன்ஸ் | 1.29% மதிப்பீட்டிற்கு அதிகம் |

அலுவலகக் குறிப்பு: மேற்காணும் பணிகளின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.
ந.க.எண் 580/2023/இ1

தீர்மானம் எண் : 623

தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 17 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் தலைமை நீரேற்று நிலையம் மற்றும் பங்களாமேடு நீருந்து நிலையங்களில் இயங்கிக் கொண்டிருக்கும் மின்மோட்டர்கள் 125Hp, 25Hp, 30Hp. மற்றும் மோட்டார் பம்புகளில் ஏற்றப்பட்ட<br>(1)புதிய குடிநீர்த் திட்டம் Clearwater 125Hp Motor Unit no..1 ன் Coil பழுதானதை சரிசெய்தல்<br>(2) புதிய குடிநீர்த் திட்டம் Clearwater 125Hp Motor pump unit no : 1&2 ன் பழுதுகள் நீக்கி சரிசெய்தல்<br>(3) கூட்டு குடிநீர்த் திட்டம் ஆற்று நீரேற்று 25 Hp Motor Pump பழுதுகள் சரிசெய்தல்.<br>(4)கூட்டு குடிநீர்த்திட்டம் Filter House ல் Filter bed No :1 ன் 250 mm wash tank Sulice value Rod மற்றும் bed outlet value சரிசெய்தல்<br>(5)பங்களாமேடு நீருந்து நிலையத்தில் உள்ள பிரஸ்காலனி 30Hp Motor Pump unit no : 1&2 ன் பழுதுகள் நீக்கி சரிசெய்தல் மேற்படி மேற்கண்ட மின் மோட்டார் மற்றும் Motor pump களில் ஏற்பட்ட பழுதுகள் நீக்கி சரிசெய்ய ஆகும் தோராய செலவினம் ரூ.5.00 இலட்சம் ஆகும். இச்செலவினத்தை நகராட்சியின் குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: 1.மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2.மேற்காணும் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 580/2023/இ1<br>தீர்மானம் எண் : 624<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 18 | மேட்டுப்பாளையம் நகராட்சியில் நகராட்சி அலுவலக கட்டிடத்தில் உள்ள கழிப்பிடங்களில் மராமத்து பணிகள் செய்யவும், வெளிப்புற சுவற்றில் வர்ணம் பூசுதல் மற்றும் அனைத்து பிரிவுகளில் தேவையான மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் தோராய செலவினம் ரூ.9.90 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொது நிதியில் மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண் 582/2023/இ1<br><br>தீர்மானம் எண் : 625<br><br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 19 | **மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள கால்வாய்கள், மழைநீர் கால்வாய்கள் மற்றும் ஓடைகளை தூர் வாரி தண்ணீர் தேங்காத வண்ணம் சீரமைக்கும் பொருட்டு கனரக JCB மற்றும் இதர வாகனங்களை கொண்டு சுத்தம் செய்து அடைப்புகளை நீக்க தோராய செலவினம் ரூ5.00 இலட்சம் ஆகும் இச்செலவினத்தை நகராட்சியின் பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது**<br>**அலுவலகக் குறிப்பு: மன்றம் அனுமதி வழங்கலாம்**<br>**ந.க.எண்** 580/2023/**இ1**<br><br>**தீர்மானம் எண்** : 626<br>**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 20 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள தல ஆய்வு செய்தல், விரிவான திட்ட அறிக்கை தயாரித்தல் மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அலுவலகத்தில் நிர்வாக அனுமதி பெறுதல் ஆகிய பணிகளை தொழில்நுட்ப ஆலோசகர் நியமித்து மேற்கொள்ள வேண்டியுள்ளது. |

| வ. எண் | பணியின் பெயர் | உத்தேச மதிப்பீட்டுத் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **3** சிறுமுகை சாலை பகுதியில் உள்ள காலி இடத்தில் (T.S. No.26) புதிய வார சந்தை கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | **2.50** |
| 2. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **5** பழைய நகராட்சி அலுவலகம் பின்புறம் (T.S. No. From 206 to 216) உள்ள சிதிலமடைந்த பழைய மீன் சந்தை கட்டிடத்தை இடித்து புதிய மீன் சந்தை கட்டிடம் கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | **5.70** |
| 3. | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் **15** அண்ணாஜிராவ் ரோடு பகுதியில் (T.S. No.344 & 137) உள்ள தினசரி சந்தை மற்றும் சிதிலமடைந்த பழைய இறைச்சி கடைகளை இடித்து புதிய தினசரி சந்தை மற்றும் இறைச்சி கடைகள் கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | **8.60** |
| 4. | மேட்டுப்பாளையம் நகராட்சி ஜவஹர்லால் பேருந்து நிலையத்தில் (T.S. No.55 & 56) உள்ள சிதிலமடைந்த பழைய கட்டிடங்களை இடித்து புதிய வணிக வளாகம் கட்டுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல் | **10.65** |
| 5. | மேட்டுப்பாளையம் நகராட்சி சாமண்ணா தலைமை நீரேற்று நிலையத்திற்கு விளாமரத்தூர் பகுதியிலிந்து தூய்மையான குடிநீரை எடுத்து செல்லுதல் பணிக்கு தொழில்நுட்ப ஆலோசகர் மூலமாக விரிவான திட்ட அறிக்கை தயாரிக்கும் பணி செய்தல | **28.40** |

எனவே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ள தொழில்நுட்ப ஆலோசகர் நியமிக்கலாம். மேற்கண்ட பணிகளை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : **1.** மன்றம் அனுமதி வழங்கலாம்

**2.** மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடந்ததற்கும் அனுமதி வழங்கலாம் (ந.க.எண். **582 / 2023/ இ1)**

**தீர்மானம் எண்** : 627

**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

| | |
|---|---|
| 21 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 சுபம் காலனி, அன்னூர் தேசிய நெடுஞ்சாலை சுபம் காலனி சந்திப்பில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதுபட்டு இடிந்த நிலையில் உள்ளது. இதனால் தண்ணீர் சிறுபாலம் வழியாக செல்லாமல் சாலையில் வடிந்து செல்கிறது. இதனால் வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகள் மிகவும் சிரமமாக உள்ளது. எனவே இதனை இடித்து புதிதாக சிறுபாலம் கட்ட வேண்டியுள்ளது. இப்பணியை மேற்கொள்ள ரூ. 5.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, இப்பணியினை நகராட்சியின் பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது<br><br>அலுவலகக் குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>தீர்மானம் எண் : 628<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |
| 22 | மேட்டுப்பாளையம் நகராட்சிக்குட்பட்ட அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசுப்புழு ஒழிப்புப்பணி மேற்கொள்ள DBC எனப்படும் களப்பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் தற்போது இந்நகராட்சியில் 20800 குடியிருப்புகள் உள்ளன. எனவே, 300 வீடுகளுக்கு ஒரு களப்பணியாளர் வீதம் 68 பணியாளர்களை எஸ்.எஸ்.பவுண்டேசன் மூலம் பணிமேற்கொள்ள பணி உத்திரவு வழங்கப்பட்டு 26.05.2023 ம் தேதியில் முடிவடைவதால் மேற்கண்ட நிறுவனத்திற்கே மேலும் 27.05.2023ம் தேதி முதல் 89 நாட்களுக்கு தொடர்ந்து பணி நீட்டிப்பு செய்யவும், அதற்கான EPF and ESI சேர்த்து தோராய செலவினம் ரூ.646.50x68x89=39,12,618/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>அலுவலகக் குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொதுசுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி நகரின் தூய்மைப்பணி மற்றும் சுகாதாரப்பணி பாதிக்கப்படாமல் இருக்க மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர் மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்படி பணிகளை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதிக்கலாம் (ந.க.எண். 2530 / 2022/ எச்1)<br><br>தீர்மானம் எண் : 629<br>தீர்மானம் : அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது |